# பாணந்துறை பிரதேச சபை
# களுத்துறை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 14 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 சனவரி 14 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பாணந்துறை பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது தந்திரிமுல்ல உப அலுவலகத்தால் காணி, கட்டிடங்கள் கொள்வனவு, நிர்மாணிப்புகள் மீள்பெறுமதியிடப்படாது 14 சொத்து விடயங்களின் ரூபா 59,647,570 பெறுமதி கூடுதலாகவும், ஒரு விடயத்தின் பெறுமதி ரூபா 2,350,000 தொகையால் குறைவாகவும் ரூபா 1,200,000 தொகையான ஒரு சொத்து விடயம் தவிர்க்கபட்டும் காணி மற்றும் கட்டிட கணக்கின் மீதிக்கும் மூலதனப் பயன்பாட்டிற்கான

வருமானத்தின் பங்களிப்புக் கணக்கு மீதிக்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது வேலைக் கடன்கொடுத்தோருக்காகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,262,201 தொகையான வேலைக் கடன்கொடுத்தோர் கணக்கு வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக ஆண்டிற்கான செலவினமாகக் கருதப்பட்டு வேலைச் செலவினக் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2012 யூலை 06 ஆம் திகதி ரூபா 10,900,000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பெக்கோ லோயே இயந்திரத்தின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் 01 ஆம் நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஆணைச்சீட்டுக் கட்டணம் மற்றும் தண்டப்பண வருமானம் ரூபா 7,098,107 தொகையாக் காணப்பட வேண்டிய போதிலும் வருமானச் செலவினக் கணக்கிற்கு ரூபா 7,924,966 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 826,859 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) நிலையான வைப்பிற்காக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய வட்டித் தொகையான ரூபா 1,738,082 தொகையான பெறவேண்டிய வட்டிக் கணக்கு வரவு வைக்கப்படுவதற்கு நிலையான வைப்புக் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 292,936,504 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,342,720 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 38,521,937 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 04 கணக்குகள் ரூபா 8,480,497 தொகையான காசு மீதி அவதானிக்கப்பட்டதுடன் ஆக்கபூர்வமாக அத் தொகை முதலீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 16,404 | 9,087 | 18,234 |
| (ii) | வாடகை | 1,671 | 867 | 3,152 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 596 | 591 | 8 |
| (iv) | ஏனைய வருமானம் | 19,337 | 66,962 | 23,992 |

---

**2.3.2 வியாபார நிலைய வாடகை**

---

(அ) வாத்துவ உப அலுவலக அதிகாரப் பகுதியின் பழைய கடைகள் 4 இன் ரூபா 107,639 தொகையும் I ஆம் கட்ட கடை அறையிலிருந்து ரூபா 45,135 தொகையும் II ஆம் கட்ட கடை அறையிலிருந்து ரூபா 47,700 தொகையுமான நிலுவை வாடகையை அறவிடுவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2013 யூன் 10 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 2003 யூலை 01 இன் பின்னர் கடை வாடகை தொடர்பான ஓர் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வாடகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடை அறை உடன்படிக்கை 10 ஆண்டுகளைப் பார்க்கிலும் பழைமை வாய்ந்தவையானதுடன் புதிய உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 காணி விற்பனை மற்றும் வரி**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1987 இக் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரிக்கப்பட்ட காணிகள் விற்பனை செய்யப்படுகையில் விற்பனை விலையில் நூற்றுக்கு 1 வரி அறவிடப்பட வேண்டிய போதிலும் 2011,2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 1,813,666 தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும் அத் தொகை மதிப்பிடப்பட்ட தொகையில் 1 சதவீதமானதுடன் எந்த சந்தர்ப்பத்திலும் காணியின் விற்பனைப் பெறுமதியில் 1 சதவீதமேனும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 செப்தெம்பர் 27 ஆம் திகதி உறுதி இல. 3703 இன் மூலம் பொது வசதிகளுக்காக வழங்கப்பட்டிருந்த கஹட்டகஹவத்த காணியின் 1 ரூட், 10.90 பேர்ச் பகுதி பொது வசதிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிராததுடன் காணியின் எல்லைகளும் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கொங்கஹகொட வீதியின் காணி 2012 ஆம் ஆண்டில் ஏலவிற்பனையிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2013 யூன் 10 ஆம் திகதி வரையிலும் பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 01 ரூட், 04 பேர்ச் அளவிலான காணியின் உறுதி சபையினால் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

**2:3:4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகாரசபையின் அங்கீகரித்த ஹொட்டேல், சிற்றுண்டிச்சாலை, விடுதி வருமானத்தில் 1 சதவீதத்தை விஞ்சாத அளவிலான அனுமதிப்பத்திரக் கட்டணமாக அறவிடப்பட வேண்டியதான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2013 யூன் 10 ஆம் திகதி வரையிலும் அத்தகைய 02 நிறுவனங்களால் 2011 ஆம் 2012 ஆம் ஆண்டிற்காகவும் 07 நிறுவகங்களால் 2012 ஆம் ஆண்டிற்காகவும் எவ்வித கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 8,431,116 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 16,560,994 |

**2.3.6 சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம்**

2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் விநியோகிக்கப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மூலம் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு அதிகாரமளிக்கப்படுவது அதிகாரம் செயற்படுத்தப்படுவது தொடர்பான அறிவுறுத்தல் கைநூலின் படி சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டிய போதிலும் 2008 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டிருந்த 16 நிறுவகங்கள் தொடர்பாக மேலும் அந் நிறுவகங்கள் இயங்குகின்றனவா என்பது தொடர்பாக உறுதிப்படுத்தி மீள அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2013 யூன் 10 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

1997 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் (மே.மா) 02/01/02/9/97 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக சீருடைக்குரிய உத்தியோகத்தர்களுக்காக சீருடை வழங்கப்படுவதற்குப் பதிலாக 151 சீருடை பயன்படுத்துவோருக்காக ரூபா 392,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**2.5 செயற்பாட்டு திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 1,717,893 தொகையான முற்கொடுப்பனவு மீதி மீளாய்வாண்டின் இறுதியிலான ரூபா 41,919,189 தொகையான கடன்கொடுத்தோர் மீதியில் பல வருட காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 28,259,697 தொகையான மீதி இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீண்டகாலமாக முன்கொண்டுவரப்படும் வாத்துவ உப அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகத்தில் மரணமான மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற 13 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 62,699 கூட்டுத்தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 யூன் 07 ஆம் திகதிய மின் உபகரணங்களின் இருப்பு பௌதீக ஆய்வின் போது அத்தினத்திலான இருப்புப் பேரேட்டிற்கும் பௌதீக மீதிக்கும் இடையில் 08 இருப்பு விடயங்களில் ரூபா 33,574 தொகையான மிகையும், 12 இருப்பு விடயங்களின் ரூபா 80,123 தொகையான பற்றாக்குறையும் நிலவியது.

(ஈ) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(உ) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் போது ஆண்டின் போது மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கும் செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஒவ்வொரு செயற்பாடினதும் நிதிப் பெறுமதி மற்றும் மேற்கொள்ளப்படும் காலப்பகுதிகள் உள்ளடக்கப்பட்டிராததுடன் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2012 பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் செலவினத் தலைப்பு 33 இற்காக ரூபா 6,667,000 கூட்டுத்தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதில் எவ்வித பணமும் செலவிடப்பட்டிராமையால் பாதீட்டின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் எய்தப்பட்டிருக்கவில்லை.

**2.6 வீதி பழுதுபார்த்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் வீதி பேணப்படலின் போது முன்கலவை பயன்படுத்தப்படுவதற்குப் பதிலாக கல் மண் (query muck) பயன்படுத்தப்பட்டு குழிகள் மூடப்படுவது மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது 67 கியூப் கல்மண் கொள்வனவு செய்யப்படுவதற்காக ரூபா 120,500 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இருப்புப் பதிவேட்டில் 24 கியூப் மாத்திரமே பதியப்பட்டிருந்தது.

(ஆ) இருப்புப் பதிவேட்டின் படி 2012 ஆம் ஆண்டிற்காக 07 கல்மண் கியூப் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய அளவு காணப்படும் வகையில் பதிவேடு சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கொள்வனவு செய்யப்பட்டிருந்த 67 கல்மண் கியூப் எந்த வீதிகளுக்காகக் கொள்வனவு செய்யப்பட்டவை என்பது குறித்து குறிப்பிடப்பட்டிராததுடன் இதற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.7 வாகனக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 1645 (அ) இன் பிரகாரம் வாகனம் தொடர்பான சம்பவக் குறிப்பேடு பேணப்பட்டிருந்த போதிலும் அவற்றில் எவ்வித பதிவுகளும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் படி குழு வாகனங்களில் 6 மாதங்களுக்கு ஒரு தடைவ எரிபொருள் பயன்பாடு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் சபையின் எந்த வாகனம் தொடர்பாகவும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப் பிரமாணம் 1647(ஆ) இன் பிரகாரம் வருடாந்த வாகனம் தொடர்பான மெய்மையாய்வு நடாத்தப்பட வேண்டிய போதிலும் சபையால் வாகன மெய்மையாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிராததுடன் வாகனப் பதிவேடு வேறாக பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் எந்த வாகனமும் மாதாந்த பொழிப்பைத் தயாரித்திருக்கவில்லை.

**2.8 உள்ளகக் கணக்காய்வு**

சபையில் போதிய உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) இருப்புக் கட்டுப்பாடு
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) பாதீடு